# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 30.03.2023 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.413**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.414**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் பிப்ரவரி 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.415**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் பிப்ரவரி 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.416**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 36 AC 6320 க்கு கீழ்கண்ட வாகன பழுதுகளை செய்து தரும் பணிக்கு 06.03.2023 ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வாகன பழுதுகளின் விவரம் :

| வ.எ.ண் | பணியின் பெயர் |
|---|---|
| 1. | 1.Engine Oil<br>2.Oil Filter<br>3.Oil Seal<br>4.Fuel Filter<br>5.Wheel bearing<br>6.Inner bearing<br>7.Top hose<br>8.Bottom hose<br>9. Steering oil<br>10.Bush<br>11.Head light assy<br>12.Bush head<br>13.Bost / fuel filter<br>14.AC House<br>15.Coolant Oil<br>16.Labour<br>17.Air Filter<br>18.Water Service full (oil) |

விலைப்புள்ளிகளின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | ஜெயம் மோட்டார்ஸ் | ரூ.26955/- |
| 2. | சன் மோட்டார்ஸ் | ரூ.28170/- |
| 3, | கணபதி மோட்டார் ஒர்க்ஸ் | ரூ.29865/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் இறுதி செய்திட மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.605/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ.26955/-அளித்துள்ள ஜெயம் மோட்டார்ஸ் கோபிசெட்டிபாளையம் அவர்களின் விலைப்புள்ளியை அங்கீகரித்து நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதி அளிக்கப்பட்டது.2. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.417**

6. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 18 கடைகளுக்கு 23.02.2023 ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 25, 39, 35, 36, 50, 52, 38, 65, 21
2. **வாய்க்கால் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கடை எண். 3**
3. புதிய பேருந்து நிலைய காலியிடத்தில் உள்ள இளநீர் கடை.
4. பழைய பேருந்து நிலைய கடை எண். 4
5. பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைகளுக்கு கிழபுறம் கிழக்கு பார்த்த கடை எண். 4, 5
6. ராமநாதன் வீதி கடை எண். 2
7. வாய்க்கால் ரோடு பதிவிலாஸ் வீதி கடை எண். 1

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்ட விவரப்படி ஒரே ஒரு கடைக்கு மற்றும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ.. | ஒப்பந்தப்புள் ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] |
| 1 | வாய்க்கால் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கடை எண். 3 | திரு.ஏ.அசாருதீன் த/பெ. அப்துல் ரஷீத் 25, கருமாயா வீதி - 4 கோபிசெட்டிபாளையம் 99659 15337 | ரூ.3,455/- | **ரூ.4,010/-** | இல்லை |
| | | திரு.ஹெச்.அப்துல் ரஷீத் த/பெ. அப்துல் ஹமீது, 118, ராமர் எக்ஸ்டன்சன் - 8 கோபிசெட்டிபாளையம் 98426 27586 | ரூ.3,455/- | ரூ.3,800/- | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிவை எண். 1. வாய்க்கால் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கடை எண். 1 - க்கு திரு.அப்துல் ரஷீத் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை விட கூடுதலாகவும், ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.3,455/- ஐ விட

கூடுதலாக ரூ.555/– சேர்த்து, திரு.ஏ.அசாருதீன் என்பவர் மாதவாடகை ரூ.4,010/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

எனவே வாய்க்கால் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கடை எண். 3 – க்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு திரு.ஏ.அசாருதீன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்
(ந.க.எண். 1567/2018/அ3)
**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**அலுவலக குறிப்பு 1. ஏ.அசாருதீன் க்கு குத்தகை உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது.**
**2.ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.418**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 36 F 7005 க்கு கீழ்க்கண்ட வாகன பழுதுகளை செய்து தரும் பணிக்கு 2.03.2023 ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
வாகன பழுதுகளின் விவரம்

| வ.எ.ண் | பணியின் பெயர் |
|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 36 F 7005 க்கு<br>1. நான்கு வீல் பழுதான பேரிங் மாற்றுதல்<br>2.பிரண்ட் வீல் வால் ஜாயிண்ட் பேரிங் மாற்றுதல்<br>3.கிரவுன் யூனியன் ஆக்ஸில் ராடு மாற்றுதல்<br>4.ஜாயிண்ட் பெட் பேரிங் புதியது மாற்றுதல்<br>5.கிளட்ச் கிட்டு புதியது மாற்றுதல்<br>6.என்ஜின் ஆயில் சர்வீஸ் மற்றும் டீசல் பில்டர் ஆயில் பில்டர் மாற்றுதல் .<br>7.டயர் ராடு எண்டு புதியது மாற்றுதல்<br>8. எட் லைட் டூம் இரண்டு புதியது மாற்றுதல் |

விலைப்புள்ளிகளின் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | கணபதி மோட்டார்ஸ் ஒர்க்ஸ் கோபிசெட்டிபாளையம் | ரூ.21,500 |
| 2. | JK Auto mobiles கோபிசெட்டிபாளையம் | ரூ.24,500 |
| 3. | Shri Jhyya Shaakthy கோபிசெட்டிபாளையம் | ரூ.25,300 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் இறுதி செய்திட மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. அனுமதி அளிக்கலாம்
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ.21,500/– அளித்துள்ள கணபதி மோட்டார்ஸ் ஒர்க்ஸ் கோபிசெட்டிபாளையம் அவர்களின் விலைப்புள்ளியினை அங்கீகரித்து பணி உத்திரவு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. கணபதி மோட்டார் ஒர்க்ஸ் விலைப்புள்ளி அனுமதிக்கப்பட்டது**
**2.அங்கீகரிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.419**

8. நகராட்சிக்கு சொந்தமான IUDP மோர் மார்கட் கடை எண். 10 மற்றும் 11 ( வரி விதிப்பு எண்கள் 057/518 மற்றும் 057/519) ஆகிய இரண்டு கடைகளுக்கும் திரு.என்.ஆர்.நாகராஜன் என்பவருக்கு 01.04.2020 முதல் 31.03.2023 வரை குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர் தனது 08.03.2023 ந் தேதிய மனுவில் தன்னால் மேற்படி கடைகளை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் 31.03.2023ம் தேதியன்று கடைகளை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார். வருவாய் ஆய்வர் தனது 13.03.2023 ம் தேதிய குறிப்பில் மேற்படி இரண்டு கடைகளுக்கும் 01.04.2023 முதல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனத்

தெரிவித்துள்ளார். எனவே மேற்படி இரண்டு கடைகளுக்கும் 01.04.2023 முதல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3060/2016/அ3 )

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். .
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.420**

9. இந்நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் **(NNT) 2022-23** இல் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 08.03.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.23 ராம் நகர் பூங்காவிற்கு நடைபாதை மற்றும் சிறிய விளையாட்டு பொருட்கள் நிறுவுதல் | 600000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.06 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 0.08 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | வார்டு எண்.10 சாய் அபிராமி நகரில் சி.சி.டி.வி கேமரா பொருத்துதல் | 168000 | **திரு .T.பிரபாகரன் ஒப்பந்ததாரர்** | 0.24 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் | 0.99 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வேங்கம்மையார் நகராட்சி உயர்நிலைப்பள்ளிக்கு SHARP (Printer / Copier/ Color Scaner) விநியோகம் செய்து தரும் பணி | 68000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே |
| | | | திரு.V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 2.94 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4. | வார்டு எண்.25 .திருவிக 4 வது வீதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உள்விளையாட்டு அரங்கத்திற்கு செயற்கை புல் தரை அமைத்தல்.(Synthetic Met) | 200000 | **திரு .T.பிரபாகரன் ஒப்பந்ததாரர்** | 0.50 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் | 0.50 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 5. | வார்டு எண்.24 பிருந்தாவன் கார்டன் பகுதியில் பூங்கா அமைத்தல் | 600000 | **திரு .T.பிரபாகரன் ஒப்பந்ததாரர்** | 0.06 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர் | 0.09 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

**ந.க.எண். 285 /2023 /இ1**

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) 1.மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மேற்படி பணிகளில் வ.எண்.2 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.T.பிரபாகரன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3. மேற்படி பணிகளில் வ.எண்.3 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

4. மேற்படி பணிகளில் வ.எண்.4 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.T.பிரபாகரன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

5. மேற்படி பணிகளில் வ.எண்.5 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.T.பிரபாகரன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

இ) மேற்படி பணிகள் திட்டப்பணிகளாக உள்ளதால் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**ஆ.1.M/s சஞ்சய் எலெக்ட்ரிக்கல்ஸ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**2. T.பிரபாகரன் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**3.M/s. சஞ்சய் எலெக்ட்ரிக்கல்ஸ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**4. T.பிரபாகரன் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**5. T.பிரபாகரன் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**6.அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.421**

10). நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய MUDF திட்ட வணிக வளாகத்தில் உள்ள மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2020–2021ம் ஆண்டில் திரு.ஜி.ரங்கராஜ் என்பவருக்கு 01.04.2020 முதல் 31.03.2021 முடிய ஆண்டு குத்தகை ரூ.11,04,705/– க்கு குத்தகைக்கு விடப்பட்டது. 2020ம் ஆண்டில் மார்ச் மாதம் முதல் கொரோனா பெருந்தொற்று நோய் காரணமாக மார்ச் 20 ம் தேதி முதல் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. அதன் காரணமாக மிதிவண்டி நிலையம் அரசு உத்தரவின் படி பூட்டப்பட்டது. தொடர்ந்து அக்டோபர் 2020 வரை பேருந்துகள் செயல்படாததால் மிதிவண்டி நிலையம் பூட்டப்பட்ட நிலையில் இருந்தது. அரசு உத்தரவின் படி கொரோனா பெருந்தொற்று காலத்தில் 2020 ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களுக்கு ரூ.1,84,118/– தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்படி குத்தகைதாரர் 2020–2021 ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகை ரூ.9,20,587/– ஆகும். மேற்படி குத்தகை தொகையில் குத்தகைதாரால் ரூ.2,84,120/– செலுத்தப்பட்டது. அவரது வைப்புத்தொகையில் இருந்த ரூ.3,00,000/– குத்தகைதொகைக்கு சரிக்கட்டப்பட்டது. மீதமுள்ள குத்தகை தொகை ரூ.3,36,467/– செலுத்தக்கோரி பலமுறை தொடர்ந்து அறிவிப்புகள் அனுப்பப்பட்டு வந்தது. இந்நிலையில் மேற்படி குத்தகைதாரர் திரு.ஜி.ரங்கராஜ் என்பவர் தனது 09.03.2023 ந் தேதிய மனுவில் மிதிவண்டி நிலையம் கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020 மார்ச் 20 ம் தேதி முதல் 2020 அக்டோபர் 31 வரை மிதிவண்டி நிலையம் பூட்டப்பட்டு, கட்டணம் ஏதும் வசூல் செய்ய இயலவில்லை எனவும், இதனால் தனக்கு பெரும் நஷ்டம் எற்பட்டு தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும், எனவே மேற்படி நிலுவை தொகை ரூ.3,36,467/– தள்ளுபடி செய்து தருமாறு கோரியுள்ளார். அதன்பிறகு 14.03.2023 ந் தேதியில் ரூ.2,00,000/– செலுத்தியுள்ளார். அந்த வருடத்திய வருவாய் ஆய்வர் தனது 16.03.2023 ந் தேதிய குறிப்பில் ஊரடங்கு காலத்தில் மிதிவண்டி நிலையம் தொடர்ந்து பூட்டப்பட்ட நிலையில் இருந்தது எனவும், தன்னால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்தது எனவும், எனவே மீதமுள்ள குத்தகை தொகை ரூ.1,36,467/– ஐ தள்ளுபடி செய்யலாம் எனத்தெரிவித்துள்ளார்.

அதன்படி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிலுவை குத்தகை தொகை ரூ.1,36,467/– கணினியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே நிலுவை குத்தகை தொகை ரூ.1,36,467/– ஐ நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நீக்கம் செய்தமைக்கு பின்னேற்பு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 2400/2017/அ3 )**

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**பின்னேற்பு வழங்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.422**

11. இந்நகராட்சியில் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்** (MLA Fund) 2022-23–ல் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 28.02.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம்** | **கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண். 2 இல் ராமர் எக்ஸ்டன்சன் 7 மற்றும் ராமர் எக்ஸ்டன்சன் 8 இல் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | **1.50** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 2. | வார்டு எண். 3 இல் சின்னச்சாமி வீதி 6 இல் உள்ள பழைய ஆழ்குழாய் கிணற்றில் சிறுமின் விசைபம்பு அமைத்து குடிநீர் வழங்குதல் | 2,00,000 | **திரு .T.பிரபாகரன் ஒப்பந்ததாரர்** | 0.12 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர். | 1.75 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 3. | வார்டு எண். 4 சின்னச்சாமி வீதி 6 மற்றும் விவேகானந்தர் வீதி சந்திப்பில் சிறுபாலம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **திரு .S.லோகநாதன் ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக் சன்ஸ் ஒப்பந்ததாரர் | 0.88 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 4. | வார்டு எண். 5 வாசு லே அவுட் மற்றும் மல்லிகை நகரில் சிறுபாலம் அமைத்தல் | 4,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.47 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 5. | வார்டு எண். 6 சதாசிவராவ் வீதியில் சிறுபாலம் மற்றும் தாசப்பன் வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | **1.31** சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| **6.** | வார்டு எண். 7 கருமாயா வீதி 3 இல் சிறுபாலம் மற்றும் மழைநீர் | 2,00,000 | **திரு .T.பிரபாகரன் ஒப்பந்ததாரர்** | 0.11 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | வடிகால் அமைத்தல் | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர். | 1.33 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 7. | வார்டு எண். 8 கருமாயா வீதி 4 இல் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.32 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 8. | வார்டு எண். 10 சாய் அபிராமி நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.14 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.04 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 9. | வார்டு எண். 11 ஐயப்பா நகரில் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.14 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.37 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 10. | வார்டு எண் 12 சீத்தம்மாள் காலனியில் சிறுபாலம் மற்றும் சி.கே.எஸ் நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.35 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 11. | வார்டு எண். 13 வாய்ககால் வீதி சந்து 1 இல் உள்ள பழைய ஆழ்குழாய் கிணற்றில் சிறுமின் விசைபம்பு அமைத்து குடிநீர் வழங்குதல் | 2,00,000 | **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.11 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 2.58 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 12. | வார்டு எண் 15 கபிலர் வீதி (நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.31 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 13. | வார்டு எண் 16 மாரியம்மன் கோவில் வீதி 1 மற்றும் 2–ல் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.34 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 14. | வார்டு எண் 17 கமலா ரைஸ்மில் வீதியில் 4–ல் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.46 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | வார்டு எண் 18 கொமரப்பன் வீதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.குழந்தைவேல் ஒப்பந்ததாரர் | 1.64 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 16. | வார்டு எண் 20 கண்ணகி வீதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.குழந்தைவேல் ஒப்பந்ததாரர் | 1.42 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 17. | வார்டு எண். 21 எஸ்.டி.என்.காலனி பஸ் நிலையம் அருகில் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.78 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 18. | வார்டு எண். 22 முத்துஷா வீதியில் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.39 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 19. | வார்டு எண். 23 ராம் நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக் சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.16 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.00 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 20. | வார்டு எண். 24 எல்.ஐ.ஜி.லே அவுட் மற்றும் தாமு நகரில் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர்** | 0.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர் | 1.50 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 21 | வார்டு எண். 25 மகாலட்சுமி நகரில் பூங்கா அமைத்தல் | 4,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.23 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.குழந்தைவேல் ஒப்பந்ததாரர் | 2.84 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 22. | வார்டு எண். 26 சிவசண்முகம் வீதி 1 இல் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 23. | வார்டு எண். 27 ஜெய்துர்க்கை நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக் சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.16 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.00 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | வார்டு எண். 28 மில் ரோட்டில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2,00,000 | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.குழந்தைவேல் ஒப்பந்ததாரர் | 1.46 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 25 | வார்டு எண். 29 பெரியண்ணன் வீதியில் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.27 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 26 | வார்டு எண். 30 சங்கரன் வீதியில் 2 இல் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000 | **திரு.N.ராமசாமி ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .K.R.ஆறுமுகம் , ஒப்பந்ததாரர் | 1.41 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 27 | வார்டு எண். 19 மயூரா நகரில் பூங்கா அமைத்தல் | 4,00,000 | **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக் சன்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.29 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 4.29 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 28 | வார்டு எண். 3 சாய் சுப்பிரமணியம் வீதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 4,50,000 | **திரு .K.குழந்தைவேல் ஒப்பந்ததாரர்** | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 0.27 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

**ந.க.எண்.143/2023/இ1**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) .மன்றம் அனுமதிக்கலாம் .

ஆ).1 . மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.N.ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. வ.எண்.–2 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள T. **பிரபாகரன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

3. வ.எண்–3 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள S.**லோகநாதன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

4. வ.எண்.4 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

5. வ.எண்.5 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. N. ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

6. வ.எண்.6 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. T.பிரபாகரன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

7. வ.எண்.7 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. N. ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

8. வ.எண்-8 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

9. வ.எண்-9 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக் சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

10. வ.எண்.10 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. N. ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

11. வ.எண்-11 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக் சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

12. வ.எண்.12 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. N. ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

13. வ.எண்.13 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.N.ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

14. வ.எண்.14 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.N.ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

15. வ.எண்-15 **க்கு** கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

16. வ.எண்-16 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

17. வ.எண்-17 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு N.ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

18. வ.எண்-18**க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு N.ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

19. வ.எண்-19 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக் சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

20. வ.எண்-20 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு N.ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

21. வ.எண்-21 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

22. வ.எண்-22 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு N.ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

23. வ.எண்-23 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக் சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

24. வ.எண்-24 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

25. வ.எண்-25 **க்கு** குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு N.ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

26. வ.எண்-26 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு N.ராமசாமி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

27. வ.எண்-27 க்கு கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

28. வ.எண்.28 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு. K. குழந்தைவேல்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

இ). மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அ).அனுமதிக்கப்பட்டது**
**ஆ)1. N.ராமசாமி –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**2.வ.எண்.2 T.பிரபாகரன் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**3. வ.எண்.3 S.லோகநாதன் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**4. வ.எண்.4 V.தங்கராஜ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**5. வ.எண்.5 N.ராமசாமி –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**6. வ.எண்.6 T.பிரபாகரன் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**7. வரிசை எண்.7 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**8.வ.எண்.8 M/s. எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**9.வ.எண்.9 M/s. எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ்–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**10. வரிசை எண்.10 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**11. வ.எண்.11 M/s. எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ்–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**12. வரிசை எண்.12 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**13. வரிசை எண்.13 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**14. வரிசை எண்.14 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**15. வ.எண்.15 V.தங்கராஜ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**16. வ.எண்.16 V.தங்கராஜ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**17. வரிசை எண்.17 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**18. வரிசை எண்.18 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**19. வ.எண்.19 M/s. எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ்–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**20. வரிசை எண்.20 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**21. வ.எண்.21 V.தங்கராஜ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**22. வரிசை எண்.22 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**23. வ.எண்.23 M/s. எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ்–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**24. வ.எண்.24 V.தங்கராஜ் –ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**25. வரிசை எண்.25 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**26. வரிசை எண்.26 N.ராமசாமி–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**27. வ.எண்.27 M/s. எம்.பி.கே கன்ஸ்ட்ரக்சன்ஸ்–ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**28.வ.எண்.28 கே.குழந்தைவேல் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**இ). அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.423**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான IUDP வாரசந்தை கடை எண். 31 ஐ திரு.பி.ஆண்டவர் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டு, மேற்படி நபர் 2018 ம் ஆண்டில் கடையினை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்து விட்டார். மேற்படி கடைக்கு ஜுன் 2018 முதல் டிசம்பர் 2018 வரை நிலுவை வாடகை ரூ.31,012/– உள்ளது. இந்நிலையில் திரு.பி.ஆண்டவர் என்பவர் 06.10.2018ம் தேதியில் இறந்து விட்டார். வருவாய் ஆய்வர் தனது 16.03.2023 ம் தேதிய குறிப்பில் மேற்படி நபர் இறந்து விட்டதால் நிலுவை தொகையினை வசூலிக்க இயலாத காரணத்தினால், மேற்படி நிலுவை தொகை ரூ.31,018/– ஐ தள்ளுபடி செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

அதன்படி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிலுவை குத்தகை தொகை ரூ.31,018/– கணிணியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே நிலுவை

குத்தகை தொகை ரூ.31,018/- ஐ நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நீக்கம் செய்தமைக்கு பின்னேற்பு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 2230/2017/அ3 )

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**பின்னேற்பு வழங்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.424**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கடைகள் அமைந்துள்ள மெயின் ரோடு, கடை வீதி, வாய்க்கால் வீதி, ராமர் எக்ஸ்டென்சன், மொடச்சூர் ரோடு, திருப்பூர் ரோடு உள்ளிட்ட பகுதிகளில் உருவாகும் கழிவுகளை பாதசாரிகள் தாங்களாகவே தரம் பிரித்து மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ள குப்பை தொட்டிகளில் போடுவதற்கு ஏதுவாக ஸ்டேன்ட் உடன் கூடிய 80 லிட்டர் கொள்ளவு கொண்ட பிளாஸ்டிக்கால் ஆன பச்சை மற்றும் நீல நிற டப்பாக்களை கொண்டுள்ள குப்பை சேகரிக்கும் கொள்கலன்கள் 25 எண்ணம் அமைத்து தரும் பணிக்கு 01.03.2023 ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் ஒரு இடத்தில் ஒரு Twin Bins Set அமைப்பதற்கு (ரூ.) |
|---|---|---|
| 1. | M/s. சஞ்சய் எலக்டிரிக்கல்ஸ்,<br>முத்து வேலப்பன் கவுண்டர் வீதி,<br>புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம். | 6,690/-<br>+<br>GST 18% |
| 2. | M/s. எக்ஸ்போசிவ் எண்டர் பிரைசஸ்,<br>12. பி.எம்.கே. ரைஸ்மில் ரோடு,<br>புதுப்பாளையம்,<br>கோபிசெட்டிபாளையம். | 6,775/-<br>+<br>GST 18% |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.சஞ்சய் எலக்டிரிக்கல்ஸ், முத்து வேலப்பன் கவுண்டர் வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமானது மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 0363/2023/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய M/s.சஞ்சய் எலக்டிரிக்கல்ஸ், முத்து வேலப்பன் கவுண்டர் வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

3. இதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1,M/s சஞ்சய் எலெக்ட்ரிக்கல்ஸ் -ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
2. **ஏற்றுக்கொள்ளப்பட்டது**, 3. **அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.425**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் வார்டு வாரியாக ஆய்வு செய்யப்பட்டதில் இடிந்த கட்டிடங்கள் பாழடைந்த நிலையில் விலாசம் அறிய இயலாமல் இனம் காண இயலாமலும் உள்ள கட்டிடங்கள் பழைய கட்டிடங்களை இடித்து புதிய கட்டிடங்கள் கட்டி வரி விதிப்புகள் செய்யும் போது பழைய வரியை நீக்கம் செய்யாமல் தொடர்ந்து வரும் வரிவிதிப்புகள் அந்தந்த நிதியாண்டில் நீக்கம் செய்யாமல் தொடர்ந்து கேட்பில் வந்த வண்ணம் உள்ளது என ஆய்வில் தெரிய வருகிறது. எனவே, மேற்கண்ட இனங்களின் படி பட்டியலில் உள்ளவாறு

நிலுவை மற்றும் நடப்பு கேட்பு பதிவேட்டில் வசூலிக்க இயலாத நிலுவைத்தொகை ரூ.62844/– நடப்புத்தொகை ரூ.32750/– ஆக மொத்தம் ரூ.95594/– தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 118–ன் கீழ் தள்ளுபடி செய்யவும், நிலுவை (ம) நடப்பு கேட்பில் இருந்து நிரந்திரமாக நீக்கம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** நிலுவை ரூ.62844/–,நடப்பு ரூ.32750/– ஆக மொத்தம் ரூ.95594/– தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –118 ன் கீழ் தள்ளுபடி செய்து நிலுவை (ம) நடப்பு கேட்பில் இருந்து நிரந்திரமாக நீக்கம் செய்யலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.426**

15. இந்நகராட்சியின் 2023–2024 ஆம் ஆண்டிற்கு தேவையான கணினி, கணினி தொடர்பான பொருட்கள் மற்றும் டோனர்கள், ஜெராக்ஸ் மெஷின் டோனர்கள் ஆகியவை கடந்த இரண்டு வருடமாக கொள்முதல் செய்யப்படாததால் கணினி மற்றும் கணினி தொடர்பான பொருட்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும், தற்போது நடைபெறும் நகர்மன்ற கூட்டம், உயர் அலுவலர்கள் ஆய்வு கூட்டம், பல்வேறு பணிக்கான கருத்துரு அனுப்புதல் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு அறிக்கைகள் போன்ற பல்வேறு பணிகளுக்கு பிரிண்ட் அவுட் எடுக்க வேண்டியுள்ளதால் டோனர்கள் மற்றும் ஜெராக்ஸ் மெஷின் டோனர்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ.8,00,000/– (ரூ.எட்டு இலட்சம் மட்டும்) ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.652/2023/பி3)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.427**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் மொடச்சூர் ரோடு, மெயின் ரோடு, மார்க்கெட் ரோடு, யாகூப் வீதி, புதிய ஆஸ்பத்திரி வீதி, முத்துஷா வீதி, உள்ளிட்ட பகுதிகளில் சேரும் திடக்கழிவுகளை தரம் பிரித்து பெறுவதற்கு ஏதுவாக Stainless Steel யினால் ஆன 60 லிட்டர் கொள்ளவு கொண்ட Stand உடன் கூடிய Twin Bins கொள்கலன்கள் 15 எண்ணம் புதியதாக அமைத்து தரும் பணிக்கு 16.03.2023 ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் ஒரு இடத்தில் ஒரு Twin Bins Set அமைப்பதற்கு (ரூபாயில்.) |
|---|---|---|
| 1. | M/s. Selvaraam Enter Prices,<br>11/23, Indhira Street,<br>Kumaranthapuram,<br>Tiruppur – 641602. | 21,175/–<br>+<br>GST 18% |
| 2. | M/s. Sharp Systems,<br>No. 106 A, Beem Sait Colony,<br>Sai Nagar, Podanur,<br>Coimbatore – 641 023. | 21,000/–<br>+<br>GST 18% |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. Sharp Systems, No. 106 A, Beem Sait Colony, Sai Nagar, Podanur, Coimbatore – 641 023. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமானது மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 0433/2023/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய M/s. Sharp Systems, No. 106 A, Beem Sait Colony, Sai Nagar, Podanur, Coimbatore – 641 023. அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**1) M/s Sharp Systems – ன் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**2) ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.428**

17. இந்நகராட்சிக்கு ICICI வங்கியின் சமுதாய பொறுப்பு நிதியிலிருந்து (CSR Fund) இரண்டு எண்ணிக்கை பேட்டரியில் இயங்கும் ஆட்டோக்கள் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு Mahindra நிறுவனத்தில் இருந்து கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆட்டோக்களின் பேட்டரியினை ரிசார்ஜ் செய்ய ELLB (30–404) MCB (16A/220VAC) Power Socket (16A/220 AC) திறன் கொண்ட இரண்டு பிளக்பாயிண்ட்டுக்கள் அமைக்கும் பணிக்கு 13.03.2023 ஆம் தேதி அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலைவிகிதம் (ரூ.) |
|---|---|---|
| 1. | SANJY ELECTRICALS,<br>MUTHUVELAPPA GOUNDER STREET,<br>KANNAN DEPARTMENT STORES (NEAR),<br>PUDUPALAYAM, GOBICHETTIPALAYAM | 4,875/– |
| 2. | EXPLOSIVE ENTERPRISES,<br>12, P.M.K. RICE MILL ROAD,<br>PUDUPALAYAM, GOBICHETTIPALAYAM | 4,950/– |
| 3. | DULASI MOTORES,<br>MODACHUR ROAD, GOBICHETTIPALAYAM | 4,990/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. சஞ்சய் எலக்டிரிக்கல்ஸ், முத்து வேலப்பன் கவுண்டர் வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம் அவர்களின் விலைப்புள்ளி விலைவிகிதமானது மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0529/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய M/s.சஞ்சய் எலக்டிரிக்கல்ஸ், முத்து வேலப்பன் கவுண்டர் வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

3. இதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு** 1,M/s **சஞ்சய் எலெக்ட்ரிக்கல்ஸ் –ன் விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
2. **ஏற்றுக்கொள்ளப்பட்டது**, 3. **அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.429**

18. இந்நகராட்சியின் 2023–2024 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், அனைத்து விதமான வரி மற்றும் வரியில்லா இனங்களின் இரசீதும், படிவங்கள், அம்மா உணவக டோக்கன் மற்றும் பதிவேடுகள் ஆகியவை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேலும், தற்போது நடைபெறும் நகர்மன்ற கூட்டம், ஆய்வுக்கூட்டம், கணக்கெடுப்பு பணிகள் மற்றும் பல்வேறு பணிகளுக்கான அறிக்கைகள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது. இதனால் அதிகப்படியான பேட்டர்கள் மற்றும் இதர பதிவேடுகள் தேவைப்படுகிறது. எனவே மேற்கண்ட பொருட்களை கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ.15,00,000/– ( பதினைந்து இலட்சம்

மட்டும்) ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.651/2023/பி3)

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.**

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.430**

19. இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளான பொதுமக்களுக்கு சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வு, நோய் தடுப்பு முறைகள் குறித்த பணிகள், மரக்கன்று நடும் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, தூய்மை இந்தியா திட்டம், SBM – 2.0 தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் மற்றும் இதர நகராட்சி செயல்பாடுகள் குறித்த விளம்பர பதாகைகள் (Flex Boards) நவம்பர் 2022 முதல் 20.03.2023 ஆம் தேதி முடிய கீழ்காணும் விபரப்படி M/S STROKE DIGITAL, 5, முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் தயார் செய்யப்பட்டு அந்தந்த பணிகளை நகராட்சி மூலம் செயல்படுத்தும் போது பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதன் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | பிளக்ஸ் தயார் செய்த தேதி | விபரம் | அளவு | எண்ணிக்கை | வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 18.11.2022 | "தூய்மை இந்தியா திட்ட SWACHH SURVACKSHAN" கழிப்பிடம் பயன்படுத்துதலின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு பதாகைகள் | 4' X 3' | 2 | 700/– |
| 2 | 25.11.2022 | "தூய்மை இந்தியா திட்ட SWACHH SURVACKSHAN" கழிவுகள் தரம் பிரித்து வழங்குதல் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு பதாகைகள் | 6' X 4' | 2 | 920/– |
| 3 | 25.11.2022 | "தூய்மை இந்தியா திட்ட SWACHH SURVACKSHAN" கழிவுகள் தரம் பிரித்து வழங்குதல் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு பதாகை | 8' X 4' | 1 | 580/– |
| 4 | 10.01.2023 | "கோபியில் புகையில்லா போகி " என்னும் விழிப்புணர்வு பதாகை | 5' X 2' | 1 | 300/– |
| 5 | 10.01.2023 | "தை திங்கள் தமிழர் பெருமை" என்னும் விளம்பர பதாகை | 10' X 10' | 1 | 1300/– |
| 6 | 12.01.2023 | "புகையில்லா போகி பண்டிகை" என்னும் பதாகை | 10' X 10' | 1 | 1300/– |
| 9 | 18.01.2023 | தூய்மை இந்தியா திட்டம் Waste to Wonder Corner" என்னும் விழிப்புணர்வு பதாகை | 6' x 3' | 1 | 370/– |
| 10 | 18.01.2023 | "தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் எனது குப்பை எனது பொறுப்பு" திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் பயன்பாடு தடை குறித்த விழிப்புணர்வு என்னும் பதாகை | 8' X 5' | 1 | 580/– |
| 12 | 20.03.2023 | "நீர்நிலைகளில் கழிவுகளை கொட்டாதீர்" என்பது குறித்த விழிப்புணர்வு பதாகைகள் | 3' X 2' | 10 | 1500/– |
| 13 | 20.03.2023 | "உலக வனநாள், உலக தண்ணீர் நாள்" என்னும் விழிப்புணர்வு பதாகைகள் | 5' X 3' | 2 | 700/– |
| மொத்தம் | | | | | 8250 |

மேற்காணும் விபரப்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அப்பணிகளுக்கு தேவையான FLEX Board களை தயார் செய்து வழங்கிய M/S.Stroke Digital, கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு மொத்தம் ரூ.8,250/- வழங்க வேண்டி உள்ளது.

எனவே இப்பணிகளை அவ்வபோது மேற்கொண்டதை மன்றம் அங்கீகரித்து அந்நிறுவனத்திற்கு தொகையினை வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.648/2023/எச்1)
**அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.431**

20. நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம் திரு.ஜி.என்.செல்வராஜ் என்பவருக்கு 2018-2019ம் ஆண்டில் (01.04.2018 முதல் 31.03.2019) ஆண்டு குத்தகை தொகை ரூ.7,40,000/- மற்றும் பணியாளர் சம்பளம் ரூ.4,23,990/- ஆக மொத்தம் ரூ.11,63,990/- க்கு குத்தகைக்கு விடப்பட்டது. மேற்படி திரு.ஜி.என்.செல்வராஜ் என்பவர் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தினால், பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 31.12.2018ம் தேதி ரத்து செய்யக்கோரி விண்ணப்பம் செய்துள்ளார். அதன்படி அவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமம் 03.01.2019 முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே திரு.ஜி.என்.செல்வராஜ் என்பவர் மேற்படி குத்தகை உரிமத்தினை அனுபவித்த 9 மாதம் 3 நாட்களுக்குண்டான குத்தகை தொகை ரூ.5,60,968 மற்றும் பணியாளர் சம்பளம் ரூ.3,21,412/- ஆக மொத்தம் ரூ.8,82,380/- செலுத்தப்படவேண்டும்.

